இன்ற நீர் சுவையாக அதே பகுதியிலே இருக்கிறது. இதனை அரசு அறியுமா? மேலும், அரசு 31 இலட்சம் ரூபாய் ஒதுக்கியதிலே ரூ. 20 இலட்சம்தான் செலவாகி இருக்கிறது. மீதம் 11 இலட்சம் பணம் அங்கேயிருக்கிறது. அந்தப் பணத்தைக் கொண்டு அந்த விவசாயிகள் பயனபடுத்துகிற, 70 மீட்டர் ஆழத்திலேயே ஆழ் குழாய்க் கிணறு அமைத்தால் அந்த நீர் சுவையாக இருக்கும் என்று மக்கள் விரும்புகிறார்கள். இதனை அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக விவரமான ஆய்வு நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970-71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) பொது நிறுவனங்கள் தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு (1986-87) அளித்த முப்பத்தேழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் பதினான்காவது அறிக்கை;

(2) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1984-85 மற்றும் 1985-86 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான பத்திகள் மீதான குழுவின் பதினைந்தாவது அறிக்கை;

(3) இந்தியத் தணிக்கைத் துறைச் தலைவரின் 31-3-1988 ஆம் தேதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) எண் 4/1989 பொது நிறுவனங்கள் ஆண்டுக் கணக்குகளை இறுதி யாக்குவதில் காலதாமதம் மற்றும் பொது நிறுவனங்களினால்

ஏற்பட்ட இழப்புகள் ஆகியவை தொடர்பான பத்தி பற்றிய குழுவின் பதினாறாவது அறிககை மற்றும் (4) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) . தமிழ்நாடு மின் வாரியம், மின் கட்டணம் விதித்தலும், வசூலித்தலும் தொடர்பான பத்திகள் மீதான குழுவின் பதினேழாவது அறிக்கை ஆகிய வற்றைப் பேரவைக்கு அளிக்கிறேன் :

5. சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்).

நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவு, ஆய்வு செய்தல், 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1991) மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தை அமளிக் காடாக மாற்றியவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நாடறியும். விடுதலைப் புலிகளைத் தமிழகத்திலே ஊடுருவ விட்டு ஆயுதக் கலாச்சாரத்தைத் தமிழகத்திலே பரப்பி, எ.கே. 47 போன்ற துப்பாக்கிகள் கிடைக்கும் மலிவு விலைச் சந்தையாகத் தமிழ கத்தை மாற்றிய அவப்பெயருக்கும் முழுக்க முழுக்க சொந்தக் காரர்கள். மலிவு விலை மதுவைத் தமிழகத்திலே அரசின் பெய ரால் அதிக விலைக்கு விற்ற தி.மு.க. அரசின் முன்னாள் முதல்வர்